## சுருக்கம்

வேளாண்மை விற்பனை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் செய்யப்பட்ட அறிவிப்பு – நாகப்பட்டினம் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அலுவலகக் கட்டிடத்துடன் கூடிய பரிவர்த்தனைக்கூடம் மற்றும் ஊரகக் கிட்டங்கி ஆகியவை கட்டுவதற்கும் மற்றும் அவற்றுக்கான செலவினம் ரூ.1.90 கோடி, நாகப்பட்டினம் விற்பனைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அரசின் அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மைத் (வேவி2) துறை

அரசாணை (நிலை) எண்.176 நாள் 20.11.2014

திருவள்ளுவர் ஆண்டு 2045,
கார்த்திகை திங்கள் 4–ம் நாள்

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.113, வருவாய்த் (நிஎ5(1)) துறை, நாள் 04.03.2014.
2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.விகுதி3/12447/2014, நாள் 09.07.2014

------

**ஆணை:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ், 07.08.2014 அன்று அறிவிப்பு செய்யப்பட்ட அறிவிப்புகளில், நாகப்பட்டினம் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு ரூ.1.90 கோடி செலவில் புதிய கட்டிடம் அமைப்பதும் ஒன்றாகும்.

/த.பி.பா/

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், 1.7.1971 முதல் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும், அப்பகுதியில் பெருமளவில் தேங்காய், புகையிலை, நிலக்கடலை ஆகியவை பயிரிடப்படுவதாகவும், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் விளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்யவும், அறுவடைக் காலங்களில் நல்ல விலை கிடைக்காத சமயங்களில் அவற்றை கிட்டங்கிகளில் சேமிக்கவும் எவ்வித வசதியும் இல்லாமல் உள்ளதாகவும், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களை இடைத்தரகர்களின் இடையூறின்றி விற்று நல்ல விலை பெற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்குவது அவசியமாகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், தனது கடிதத்தில் நாகப்பட்டினம் விற்பனைக்குழுவின் கீழ் செயல்பட்டுவரும் வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள தேத்தாக்குடி, தெற்கு கிராமத்தில் புல எண் 257/1, அரசு புறம்போக்கு மயானம் என்ற வகைப்பாட்டிலுள்ள 1.02.5 ஹெக்டேர் நிலத்தில் புல எண். 257/5– என உட்பிரிவு செய்து ''விற்பனைக்குழு'' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள 0.18.0 ஹெக்டேர் நிலத்தில் அலுவலகக் கட்டிடத்துடன் கூடிய பரிவர்த்தனைக் கூடம் ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் ஊரகக்கிட்டங்கி ரூ. 95.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ. 1.90 கோடி மதிப்பீட்டில், நாகப்பட்டினம் விற்பனைக்குழு நிதியிலிருந்து கட்டுவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பி அரசின் ஆணையினை கோரியுள்ளார். இதற்கு ஏதுவாக மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நாகப்பட்டினம் விற்பனைக்குழுவிற்கு நில உரிமை மாற்றம் செய்திட உத்திரவிடப்பட்டு, அதற்கான தொகை செலுத்தப்பட்டது என்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் மேற்குறிப்பிட்ட கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் 07.08.2014 அன்று செய்யப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம் நாகப்பட்டினம் விற்பனைக்குழுவின் கீழ் செயல்பட்டுவரும் வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள தேத்தாக்குடி தெற்கு கிராமத்தில் புல எண். 257/1, அரசு புறம்போக்கு மயானம் என்ற வகைப்பாட்டிலுள்ள 1.02.5 ஹெக்டேர் நிலத்தில் புல எண். 257/5– என உட்பிரிவு செய்து ''விற்பனைக்குழு'' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள 0.18.0 ஹெக்டேர் நிலத்தில் அலுவலகக் கட்டிடத்துடன் கூடிய பரிவர்த்தனைக் கூடம் மற்றும் ஊரகக்கிட்டங்கியினை தலா ரூ. 95.00 இலட்சம் மதிப்பீட்டில், ஆக மொத்தம் ரூ. 1.90 கோடி செலவில், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் கட்டுவதற்கு, அரசு ஆணையிடுகிறது. மேலும், அதற்கான செலவினம் ரூ.1.90 கோடி (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் மட்டும்) நாகப்பட்டினம் விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், 1991 ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) விதிகள் விதி எண் 96–ன் படி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/த.பி.பா/

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண். 45993/வேளாண்மை/2014, நாள் 28.08.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

ராஜேஷ் லக்கானி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர்,
சென்னை–32.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம்,
செயலாளர், நாகப்பட்டினம், விற்பனைக்குழு.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை–32 மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
உறைவிடத் தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை பிரிவு) அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
வருவாய்த் துறை/நிதித்துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9/வேளாண்மைத் (வ & தி) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

20.11.2014
பிரிவு அலுவலர்.